# முத்துவடுகநாதர் குறவஞ்சி

பதிப்பு

**தே. ஜெயா**

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை - 600 005.**
**2007**

# முத்து வடுகநாதர் குறவஞ்சி

*சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப் பேற்றிற்காக*
*சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு*
*அளிக்கப்பெறும் பதிப்பேடு.*


பதிப்பாளர்
**தே. ஜெயா**

நெறியாளர்
**முனைவர் வீ. அரசு**
தமிழிலக்கியத் துறைத்தலைவர்



தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை – 600 005

ஏப்ரல் – 2007

சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப் பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு
எண்: 53010607

முனைவர். வீ. அரசு
துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

## நெறியாளர் சான்றிதழ்

"முத்து வடுகநாதர் குறவஞ்சி" எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் "சுவடியியலும் பதிப்பிலும்" எனும் பட்டயம் பெறுவதற்காக **தே. ஜெயா** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கின்றேன்.

நாள்:
இடம்: சென்னை – 5.

நெறியாளர்

**(வீ. அரசு)**

**தே. ஜெயா**
முதுகலை இரண்டாம் ஆண்டு
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

## பதிப்பாளர் உறுதிமொழி

"சுவடியியலும் பதிப்பியலும்" எனும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **"முத்து வடுகநாதர் குறவஞ்சி"** எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என்னுடைய தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்

நாள்:

இடம்: சென்னை – 5.

(தே. ஜெயா)

# உள்ளடக்கம்

பக்கம்

1. முன்னுரை 9

2. நன்றியுரை 11

3. செய்யுள் 13

பின்னிணைப்பு

1. செய்யுள் முதற்குறிப்பகராதி

2. சொல்லடைவு

துணைநூற்பட்டியல்

# முன்னுரை

தமிழ் இலக்கியத்தின் சிறப்பினை உலகிற்கு வெளிப்படுத்திய பெருமை ஓலைச்சுவடி அறிஞர்களை சாரும். தமிழ் ஓலைச்சுவடிகளை கண்டுபிடித்தது மட்டுமல்லாமல் அதனை பதிப்பித்த புலவர் பெருமக்களுள் உ.வே.சாமிநாத அய்யர், ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இவர்கள் சிறப்பான இலக்கிய இலக்கணங்களைப் பதிப்பித்து தமிழுலகிற்கு பெருந்தொண்டு செய்துள்ளனர்.

**குறவஞ்சி இலக்கியத்தின் தோற்றம் :–**

முக்காலமும் திறம்படக் குறத்தி உரைப்பதாகப் பத்துப் பாடல்களில் இருந்த குறத்திப் பாட்டு கலம்பகத்தில் குறத்தி குறிகூறும் அளவில் ஓர் உறுப்பாக வளர்ந்தது. பின்னர், குறி சொல்லுவதற்கு முன்னும், பின்னுமாகச் சில செய்திகள் சேர்ந்து குறமாக விரிந்தது. பிற்கால நாடகப் போக்கும் குறவன் குறத்தியின் வாழ்வுக் கூறுகளைக் கொண்ட குறவன் நாடகமும் கலந்து குறவஞ்சி எனும் தனிப் பிரபந்தம் உருவானது.

**குறவஞ்சி அமைப்பு**

தலைவன் உலா வந்த காலை தலைவி கண்டு காமுற்று விரத வேதனையால் திங்களையும் தென்றலையும் பழிப்பாள். தலைவன் பால் பாங்கியைத் தூதனுப்ப, அப்போது, மலைவளம் பாடிவரும் குறத்தியின் திறம் தெளிந்து குறிகேட்க, அவளும் குறிதேர்ந்து நல்வரவு கூறிப் பரிசில் பெற்றுச் செல்கையில்,

குறவன் புதிய ஆடை அணிகளோடு வரும் குறத்தியைக் கண்டு ஐயுற்று வினாவ, பின் இருவரும் இறைவனை வழுத்திச் செல்வதாய் குறவஞ்சியின் அமைப்பு காணப்படும்.

## யாப்பு அமைப்பு

குறவஞ்சியில் வரும் நிகழ்ச்சிகளை விருத்தம், அகவல், வெண்பா, கொச்சகம், கலித்துறை, கழிநெடில் ஆகியன கொண்டு வசனம் விரவ, இடையிடையே சிந்து, கண்ணி முதலியவற்றால் பாடப்பெறும்.

இச்சுவடி விருத்தம், அகவல், சிந்து முதலியவற்றால் முத்து வடுகநாதரின் பெருமை கூறுவதாய் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.

## பாடுபொருள்

தெய்வத்தைத் தலைமையாகக் கொண்டு பாடப்பட்ட இவ்விலக்கியம் நாளடைவில் மானுடரைப் பற்றிப் பாடும் நிலைக்கு மாறியது. விராலிமலைக் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி போன்றவற்றைக் கூறலாம். குறவஞ்சியினுள் காலத்தால் முற்பட்டது குற்றாலக் குறவஞ்சி ஆகும்.

இச்சுவடி தெய்வத்தின் மீது பாடப்பட்டுள்ளது. அக்காலத்து நடையினை ஒட்டியது. படிப்பறிவில்லா பொதுமக்கட்கு முத்து வடுகநாதரின் பெருமையை கூறுவதாய் அமைந்துள்ளது.

இயற்றிய புலவர்பெயர் தெரியவில்லை.

## நன்றியுரை

சென்னைப் பல்கலைக் கழக தமிழிலக்கியத் துறையில் முதுகலையில் சேர வாய்ப்பளித்தமைக்கும் சுவடியியல் பட்டய வகுப்பில் சேரவும் வாய்ப்பளித்த தமிழிலக்கியத் துறைத் தலைவர் முனைவர் **வீ. அரசு** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியியல் பட்டயப் பயிற்சி வகுப்பில் சிறப்பான முறையில் பயிற்சி கொடுத்த, பேராசிரியர் **வீ. அரசு** முனைவர் **ய. மணிகண்டன்** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு ஓலைச்சுவடிகளைத் தந்து அவ்வப்போது உதவியாக இருந்த, அரசினர் கீழ்த்திசை சுவடியியல் நூலகத்தினர்க்கு நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

இப்பதிப்பேடு உருவாக எல்லா வகையிலும் எனக்கு உதவிபுரிந்த நண்பர் **ஜெ. பஞ்சாட்சரம்** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துச் செயல்களுக்கும் உறுதுணையாய் நின்று என்னைச் செயல்பட வைக்கும் என் தந்தை **க. தேவராஜன்** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு உதவிய நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# முத்து வடுகநாதர் குறவஞ்சி

## காப்பு

1. தகுட திமித்திமித் தகிட தகிட செககண
செக்கிண தனத தனத தன
வெனு வினுத பாத வாம பரியான
மிகுகடின துடின தடமொடு வடகர் குடகர்
கெடி விருத்திர வருமுத்து வீரப் பூச்செயன்மேல்
மகபதிகள் செகபதிகள் மனுபதிகள் தனபதிகள்
மடபதிகள் துதிசெய் குறவஞ்சியைக் கூற
அகட விகடஞ்சொ(ட)ல வுணர்முடி யிடற
அக்கை குழலுக்கிர வேலாயுதந் துணையே.

## மங்களம்

2. வீராதி வீரனுக்கு மங்களம் – நெடு
முத்துவீரப் பூச்சேந்திர னுக்கு – மங்களம்
சுத்தமான சூரனுக்கும் சுஞ்ஞைசைகுல தீரனுக்கும்
மாற்றின் கிரீடனுக்கு ராசசிரோ ரெத்தினனுக்கும்
சத்திய வாய்மை காந்தனுக்கு
சாம்பி ராச்சிய கர்த்தனுக்கு
வித்துவ பரிபாலனுக்கு மங்களம் – முத்து
வீரப்பூச் சேந்திரனுக்கு மங்களம்.

## விருத்தம்

3. நகநக நக்கென்ன நத்து முத்துக்க ளெல்லா
மிகமிக விளங்குமுத்து வீரப்பூச் சேந்திர நாட்டில்
நிகநிக நிகெனன நெற்றியில் சுட்டி மின்ன
தகதக தகெனனச் சகி வந்து தோன்றினாளே!

## பாடல்

4. பிராணசகி யிதோ வந்தாள்
கெம்பீரமான பிராணசகி யிதோ வந்தாள்
தாதி தத்திமித் தோதி தச்செனு
ததாதன தத்தன தாத குறதத்திமி
திமித்திமி தகிட தகிட தகிட தரிகிட
தெத்தெத் தேயன்ன (பிராணசகி)
தகதகத் தகதக் குதிமி தாதி
தொதிதிமி செககணங் கனக
தொங்கத் தொங்கத் தொந் தோமென
பிராணசகி யிதோ வந்தாளே!

5. தணத்தன தாந்திமித் திமிதோந் தகத்தீஞ்
செனுதத்திமி தரிகிட தத்திமி திரிகிட
தோந்தெய்யத் திமி தொங்கத் தென்ன
பிராணசகி யிதோ வந்தாள் — கெம்பீரமான
பிராணசகி யிதோ வந்தாள்
தகுறத் தகுற தாந் திகுற திகுற தாந்
தணத் தணதாஞ் செனுத செனுதா

தத்திதா திதிமி தித்தி தொதி யெனும்
முத்து வீரப்பூச் சேந்திர நாட்டில்
பிராணசகி யிதோ வந்தாள் – கெம்பீரமான
பிராணசகி யிதோ வந்தாள்

### விருத்தம்

6. சுத்தி யத்தெரி மாக்குச் சோதரே பயிட்டா வென்ன
தத்திய பாதலிஞ் சாய்பு சலாமலேக் கென்று கெஞ்சி
லத்தி போடத் துப்பாக்கிட மிடமி ரெண்டாங் கிட்ட
முத்து வீரேந்திரன் மீதில் மோக மோகினி வந்தாளே.

### பாடல்

7. கொண்டையில் மதுவுணும் வண்டுகளாட
கெண்டை நிகரும் வழி வண்டுகளாட
செண்டு முலையில் மலர் வண்டுகளாட
ரெண்டு கயிலும் அணி வண்டுகளாட
தாத்திமி என்னும் பாதத்தையும் நாட்டி
வித்தக மதனன் துரைத்தனம் நாட்டி
எத்திசை யெங்கும் செயதம்பம் நாட்டி
முத்து வீரேந்திரன் முத்தமிழ் நாட்டில்
ரஞ்சித சுகமோகன வஞ்சியும் வந்தாள்
–அவதவுதென்ன
ரஞ்சித சகமோகன வஞ்சியும் வந்தாள்

## விருத்தம்

8. ரதி தமையந்தி சீதை ராதை யிந்திராணி சந்திரமதி
மண்டோதரி சுமத்திரை தமையந்தி மச்ச கெந்தி
திரோபதை சித்தாரங்கி சிரோ ரற்றின மோகனாங்கி
அதிமுத்து வீரேந்திரன் மேல் ஆசைலா கிரியானாளே!

9. காந்தியுடன் காந்தியாய் தீ(ய்)க்
காந்துறாய் போலே வெண்ணிலாவே
ரதி காந்தன் முத்துவீ ரேந்திரனின்
காந்தனானால் காந்துவாயோ வெண்ணிலாவே
அம்பாதத்தில் வந்து நீயும்
அம்புலிபோலே வாட்டுகிறாய் வெண்ணிலாவே
மலரம்பன் முத்து வீரேந்திரன்
அன்பரானால் அடஞ்செய்வாயோ வெண்ணிலாவே
மாலையினில் வந்து நீயும்
மாலியவான் போல்வாட்டுகிறாய் வெண்ணிலாவே
திருமாலான முத்து வீரேந்திரன்
மாலை தந்தால் மால்செய் வெண்ணிலாவே
ஆகாசத்தில் வந்து நீயும்
ஆகாரவி போல் வாட்டுகிறாய் வெண்ணிலாவே
மதனாகரன் முத்து வீரேந்திரன்
அகம்சேர்ந்தால் அலர்கொட்டுவாயோவெண்ணிலாவே

10. சூரஞ்சேரு முத்துவீர துரந்தரிகன் பஞ்சபாணா—என்னைச்
சாரமுடன் அணைந்தால்
தவறாமல் வருவாயோ – பஞ்சபாணா

கறத்தனானகன் முத்துவீரத்துறை பஞ்சபாணா – என்னை
முத்து முத்தால் சேர்ந்தால் சற்றும்
சுற்ற மாட்டாய் – பஞ்சபாணா

சொல்லுமுத்து வீரவல்லமைக் குருசில் பஞ்சபாணா – என்னை
நல்ல குணமாய்ச் சேர்ந்தால்
வில்லும் வளைத்தெய்வாளே பஞ்சபாணா

சட்டன்முத்து வீர சிட்டபரி பாலகன் பஞ்சபாணா – என்னைக்
கட்டி அணைந்தால் உன்னைக்
குட்டைதனில் அடிப்பேன் பஞ்சபாணா!

11. உரத்தன் முத்து வீரன் தென்றலே
வந்தாலோடுற தறியாமல் தென்றலே
நரிபோலவே வந்து தென்றலே – மெள்ள
ராசாளி யாகிறாய் தென்றலே
கிளைசேர் முத்துவீரன் தென்றலே – வந்தால்
கெஞ்சுற தறியாமல் – தென்றலே
வளையெலி போல்வந்து தென்றலே
ராவணன்போல் சாதிக்கிறாய் தென்றலே
சாணன் முத்துவீரன் தென்றலே – வந்தால்
தவிக்குற தறியாமல் தென்றலே
பானிச்சு திரிகிறாய் தென்றலே – அல்குலாம்
பாம்புக்கிரை யாக்குவேன் தென்றலே.

12. அஞ்சுகமாம் பிராண சகியே – எனக்கோர்
வஞ்சகமாம் பிராண சகியே
ரஞ்சிதமாய் சொல்லிசகியே – முத்து
வீரேந்திரன் புயந்தரச் சொல்சகியே
அந்தமதாம் பிராண சகியே – இப்போ
என்சீவன் அந்தமதாம் பிராண சகியே
தந்திரமாய் சொல்லிச் சகியே – முத்து
வீரேந்திரனை வரச்சொல் சகியே
அம்பரமாம் பிராண சகியே – மதவேளையும்
அம்பரமாம் பிராண சகியே
ரம்பையெனச் சென்று சகியே – முத்து
வீரேந்திரன் சுகந்தரச் சொல்சகியே
சம்மதமாம் பிராண சகியே – குயிலிசையை
சம்மதமாம் பிராண சகியே
ரம்மியமாய்ச் சென்றுசகியே – முத்து வீரேந்திரன்
முத்தந் தரச்சொல் சகியே

## விருத்தம்

13. அனுமன் வாலாத் துரோபதை சேலை அகத்தியன் தேகம்
அர்ச்சுனன் அட்சய பாத்திரங்கள் துரிதமாற் கண்டன்
நேர்முத்து வீரப்பூச் சேந்திரன் முன்னே தனதுடன்
சென்று நானுந்தானா பத்தியம் சொல்லு வேனோ

## அகவல்

14. கார்வண்ண னுந்தியுங் கமலாசன் பிறப்பும்
பாரனமும் தாரப்பறுவதை மனந்தஞ்
சிட்டிச்ச பொழுது தெட்சணா பூமி
நெட்டிச்ச பொழுது நெறுநெறு நெறென
நடுநடு நடுங்கி நான்முகன் அறிந்து
தடமுலைப் பார்வதிச் சமேதனை நினைந்து
அண்ட முகடண்ட அயரண்ட பகிரண்ட – செக
தண்ட நவகண்ட பிறசண்ட முழுதண்டமுற்
வாதார் மேலேழு பாதாள லோகாதி
போதாமல் மிதேறியே தாவி வாதோடி
ஆழிசூலகேளு மேளுமே சமனாக
வாழவே அயனார் வேளமா மலையான்
வள்ளல்சேர் புவியில் வான்சென்னல் நிறைய
வெள்ளமே மிகுந்த வெள்ளா றுடையான்
மலையஞ்ச கடலஞ்சு வனமஞ்சு நகரஞ்சு
பொருள் மிஞ்சுதளவை நன்னாடன்
மேவு கமுகம்பிள்ளை வெண்ணிலாப் பிள்ளை
மேல்தாவி முத்துங் கொடுத்திடும் கோனாடன்
மிஞ்சு கதிரடியில் வின்மேல் சிதறும்நெல்
பசுஞ்கிள்ளை புராணம் படித்திடப் பூவைப்
பிற்சிங்கிக்கு ராச கெம்பீர வளநாடன்

15. வழியெலாம் வயலந்த வயலெல்லாம் மடையந்த
மடையெலா மடுவந்த மடுவெலாம் வதியந்த
வதியெலாம் மரையந்த மரையெலா மலரந்த
மலரெலா மதுச்செரி மருங்கை நன்னாடன்
சித்திரமால் கொண்டுவரும் தெய்வ அரம்பையர்
முத்து மாலையை நேருமுல்லை மாலையினான்
நெற்றியால் எதிர்த்த நேரார் தளத்தை
மாற்றியே தரித்தவாகை மாலையினான்.

16. ஒடிச்சிலாகிச்சு உச்சி யிச்சிர வர்வைலாடிச்சு
விண்ணதிர நடமிடும் பரியான்
தாட்டிய ஒன்னார் குஞ்சரக் கேடென்–பிறைக்
கோட்டின் மேல்பாயும் கோட்டி யானையினான்
திக்கரசர் கிரீட ரெற்றினப் பொடிகள் பொடிபடக்
கொட்டமிடு வச்சிரலாட லுட்டையி னான்
அற்புதப் பதினெட்டா யுதம் படைத்து
மெய்ப்புடன் கடல்போல் விளங்கும் சேனையினான்.

17. இந்திர செயித்து விட்டிடு நாகப்பாசஞ்
சிந்தைவே வென்றசெய கெருட்டாலான்
அண்டியரதி சேரங்கச னெனவே
மண்டலம் மெச்சும் காடலு டையான்
ரவிமதி சூழும் நாலு திக்குடனே
புவியெலாம் வென்ற புலிக்கொடி யுள்ளோன்
பொங்கத் துடனுயர் சங்கத் தமிழறி
துங்கக் கவிஞர்சொல் சிங்கக் கொடியான்
மாதண்ட திரிசூல வயிரவன் நடனமிடு
மூதண்ட கூடமும் இலக்கு முரசான்.

18. உக்கிர மார்த்தண்ட னுயருக்குற கிரணங்களெறி

திக்கெலாஞ் செங்கோல் செலுத்து மாலையினான்

நன்னாது அரிஞ்சுரர் நாதன் எனவந்து

கன்னாடர் புகள் வீரகங்கண நரேந்திரன்

ஏராசா ராசேந்திரர் கீர்வாண உபசாரமொடு

சொல்லும் சாடிக்காரர் கண்டன்

திங்களா திங்களா திலிதிலி திலீயென்று

வங்காளர் புகழபஞ்ச வர்ண பாவாடையான்

நொடுதோ இல்லிபா நாவு நாவந்தென்மனா

கென்னமார் புகழும் நதம்பா கண்டன்.

19. அணுகலார் தலையெலா மரிந் தரிந்தே

தோரணங் கட்டுவீர் சின்னய்ய வேள்பாலன்

கிறு கிறென மனமருகு கெடியரசர் எதிர்கொண்டு

திறையிடும் வீரப்பூச் சேந்திரன் துணைவன்

ஆட்சியாயொரு குடையில் ஆளுமன் பத்தாறு

ராச்சியந் தனிலுள்ள ராசாதி ராசருட

சோபுதூர் முசுபுதார் சுபையதார் சிமையதார்

சீபுவாசலில் நின்று செயசெய பராக்கென்று

லிகுமுதாரிய ரெச்சரிக்கை செய்திடும் கொலுத்திகள்

முத்து வீரப்பூச் செயராசன்!

20. மக்கனித்தேச மின்னாரை ஆரையெனத் தக்கதாந்

தொக்க தொந்த கதகத்தணா தணாச்

செகுசேயெனத் திருகணித்தா கெசலாகு

பொடக்கு மிறுடக்கை சிங்களபேரி

குங்குமின் குங்குமின் குமுகுமுயென வென்றிடும்
கெககன வாயு மேலூர்படை பொருவதேன்
ஆகாச விறுதுதிர் அண்டபானு விரோத
ரகுமண்டல மீதுரவி சூரைகொள் வதாய்
சோதி மத்தாப்புகள் சொலி சொலிக்கமிக
வேதவள் சாயமறையின் வெண்ணிலா
மிறைபைகேது!

21. தத்தெய்ய தமிதகிட தணதனத செணுசெணு
திமித்திமி ததத்தக்கு திக்குதொதி மிதோதி
செஞ்செம்மென சகாரி திரதாருக முனிவர்
தஞ்சமென முன்னிலுஞ் சதகுணம் வீரகசன்
நதமி கப்பாரி சுடலாயுத கொடூரனே
ரதிகவிளி மதனாரா ரென்று சீறிடக்
கொப்பொடு முத்துக் குச்சிதரித்துப்
பீலி மெச்சும் பிச்சி முடித்து
கின்னரப் பட்சி கொச்சிக்கும் வெள்கிவாழ்
திவ்விய தெய்வக் குறவஞ்சி வந்தனளே!

குறவஞ்சி தரு

22. வஞ்சி வந்தாள் குறவஞ்சி வந்தாள்
வஞ்சிலோகப் பிரபஞ்ச சஞ்சீவி வந்தனளே!
வஞ்சியரசர்கள் செஞ்சியரசர்கள் தஞ்ஞையரசர்கள்
கெஞ்சவே
மஞ்சு நேர்குழல் மஞ்சள்நடை மஞ்சள்வாடை

வஞ்சி தன்னையும் வஞ்சம்செய்யிடை ரஞ்சுமின்
கொஞ்சவே
அஞ்சனந்திகள் அஞ்சனவிளி அஞ்சுலோகமும் மஞ்சவே

வஞ்சித் தாளிசை வஞ்சித் துறையோடு
வஞ்சி விருத்தங் களும் சொலும்
ரஞ்சிதரையு சரஞ்செய் முத்துவீரன் நாட்டில்
வஞ்சி வந்தாள் குறவஞ்சி வந்தாள்.

**வேறுதரு**

23. குறவஞ்சி வந்தாளய்யா – ரூபலாவண்ணியக்
குறவஞ்சி வந்தாளய்யா

திறமிஞ்சும் பாஞ்சிவிரல் மிஞ்சியனியச்
செய வஞ்ச மதனஞ்சாதி கொஞ்சிப் பணிய
நிறமிஞ்சு செகரஞ்ச கருங்கெஞ்சித் துணிய
நிசஞ்சரிக மஞ்சரியள் கந்தணிய
பகிரண்ட மதுகண்ட பிரமன்கண்டு கலங்கப்
. மத்தண்டைய தொண்டு குறிகொண்டு துலங்கச்
செகதண்ட லிருதண்ட முகடன் இயலுங்கச்
செய மண்டலிகர் தொண்டுபுரி தொண்டிலங்க

குறவஞ்சி வந்தாளய்யா – ரூபலாவண்ணியக்
குறவஞ்சி வந்தாளய்யா

24. அஞ்செழுத்தையுச் சரிப்பேன் ஆசிராசீரே
அண்டாண்டமும் படைப்பேன் ஆசிராசீரே
சுஞ்சுகலோ மென்றுசொல்லி ஆசிராசீரே
சுஞ்சைலங் கிஷம் வளப்போம் ஆசிராசீரே

வக்கணித்து மென்றுசொல்லி ஆசிராசீரே
மந்திர வாதியைச் செயிப்பேன் ஆசிராசீரே
சக்கரத்தையுச் சரிப்பேன் ஆசிராசீரே
சத்துருக்களைச் செயிப்பேன் ஆசிராசீரே
புத்தியில் கொரஞ்செபிப்பேன் ஆசிராசீரே
பூதங்களை ஆட்டிவிப்பேன் ஆசிராசீரே
அட்சரமொன்றை நினைப்பேன் ஆசிராசீரே
அக்கினியின் மேல்நடப்பேன் ஆசீராசீரே
சித்து மந்திரம் நினைப்பேன் ஆசீராசீரே
தேசமெங்கும் போய்வருவேன் ஆசிராசீரே

### விருத்தம்

25. செக செக செகுசெகு செந்தரிகு குதரீத்
தீந்தக திகுதிகு தத்தன தனக்கென னுஞ்சாரிமிகு
கொலு விளங்கு முத்துவீரப் பூச்சேந்திர நாட்டில்
அகமகிழ் குறத்தியே நீயறிந்த மாமலை சொல்வாயே

### பாடல்

26 பாடல் வேள்கிரியின் அந்தரஞ் சொன்னால்
அங்கங் குளிந்திடும் தேசமெங்கும் தேனூறும்
சாதிரற்றின் மாங்குறச் சாதி சூட்டும்
புஷ்ப்ப சாதிக்கிரங்கி சாதிகை நீட்டும்
எங்கள் வாசலில் நின்றால் இலங்கை தெரியும்
எங்கள் தங்கை வாசலில் அட்டகெசங்கள் தெரியும்
மங்கையர் வாசலிலெல்லா சொர்க்கம் தெரியும்

வச்சிர தங்கமேடையும் மேருவங்கம் தெரியும்
பாங்கர் நட்சத்திரம் முத்துப்பந்தரை யொக்கும்
வாங்கர் அருவி தாளமேளத்தை யொக்கும்
எங்கள் மால்முத்து வீரேந்திரன் வேள்மலை
இந்திர னொக்கும் எங்கள் வேள்கிரியின்
அந்தரங்கம் சொன்னால் அங்கங் குளிர்ந்திடும்.

## விருத்தம்

27. நூர்வில்லிபாரே தம்மு நொடு நொடு நொடு
நொடிந்தட வெங்கு மில்லை யென்று நிசிகா
கன்னடியா துத்தியம் மேவிய கொலுச் சேர்
முத்து வீரப்பூச் சேந்திர நன்னாட் டினில்
தேவதாங் குறத்தியே நீயறிந்த நதி சொல்வாயே

## பாடல்

28. அரும்பொன் நதி வெள்ளிநதி அருளும்பொன் நதியும்
முத்துநதி பவளநதி முழுவைர நதியும்
பச்சைநதி நீலநதி இரும்புநதியும் அறிவேன்
மண்ணுநதி கல்லுநதி மிருவும் மணல்நதியும்
தண்ணிநதி காற்றுநதி தழல்நதியும் அறிவேன்
இரும்புநதி அமிர்தநதி கனருசித்தே நதியும்
பரிந்து முத்து வீரேந்திரன் பாலநதியும் அறிவேன்.

## விருத்தம்

29. சரிகரி சரிசகாரி சாரி கசரீ ககரி
சகாரி கசரீ ககாரீச வெனச் சங்கதீர்

விரவிய கொலுழ்சேர் முத்துவீரப் பூச்சேந்திர நாட்டில்
வரிசையாங் குறத்தியே நீயறிந்த ராச்சியம் சொல்வாயே

பாடல்

30. ராமுகோ ராமுகோ என்னும் இந்துஸ்தானம்
வாயில் வலார் என்னுந் துலுக்கானம்
தாமேத ரேதிரே என்னும் ஒட்டியானம்
சம்போ பத்தே சித்தென்னும் கீர்வானம்
பூலோபுத்தே சொறு என்னும் மீளுவம்
புவனே புவனே சகாவென்னும் துளுவம்
பாலே பாலே சித்தென்னும் மாளவம்
தெத்திலி திலிதிலி என்னும் கலிங்கம்
தேவரேநூவு சங்கென்னும் மாரட் டியம்
முத்து வீரேந்திரன் தம்முள் ராச்சியம் அறிவேன்.

விருத்தம்

31. தாந்திரி திரிதில்லா தில்லாந்த தில்லாந்தத் தில்லாந்
தொந்தகத் தில்லாந் தில்லா தெந்தோ தில்லாளு
வேந்தர்சொல் கொலுச்சேர் முத்துவீரப் புச்சேந்திர
நாட்டில்
காந்தியாங் குறத்தியேநீ கருத்தது செயம் சொல்வாயே

பாடல்

32. கடக்காதன் மேல் பொன்னானங் கனிந்துகண் வளரும்
கயின்முக்கண் மெல்ல குலக்கண்ணன் வீதிவரும்

முடக்காலன் மேல்சிந்து முகவேங்கை யிவரும்
மூக்குவாய்மேல் மூக்குமுதிர் வாய் னுகரும்

ஒருமணிக்கண் மேல் நோயூர்முகனே மேவும்
ஊரின் சுரங்கன்மேல் கொம்போ ரானை வாவும்
கரையில்லா நீர்க்குள்ளே கறப்புள் உலாவும்
காக்கையன் கஷயத்தியனைக் கயில்நீரைத் தாவும்
நக்காலன் கருவைக் கிடாய்பட்சிக் காக்கும்
நரிப்பரிக் கொம்பால் முள்ளன்கொம்பில் தாக்கும்
ஆக்கஞ்சேர் முத்து வீரய்ய நாட்டில்
அதிசயம் மெத்த வுண்டம்மை யின்னம்மே!

### விருத்தம்

33. அய்யய்யே ஆயே உய்யே அய்யய்யே ஆயேன்னும்
இய்யிய்யே எய்யேய் யோயே எய்யெய்யே வாணர்
மெய்யுள் கொலுச்சேர் முத்துவீரப் பூச்சேந்திர நாட்டில்
சைகை தூத்தோதித் தரிதித் தங்கமாலையுந் தந்தாளே

### பாடல்

34. ரதிமதலீலை செய்தான் – ரதியறிந்து
ரதிமதலீலை செய்தான்
ரதிக்கச் சம்மதிக்க நெஞ்சுதிக்க மால்கொதிக்க
மெய்கொதிக்க நீர்குதிக்கக் கண்மதிக்க நான்துதிக்க
அன்பாய் பண்பாய் சொம்பாய்த் தெம்பாய்
நண்பாய் முன்பாய் பின்பாய்
விந்தைகள் கொண்டு தந்திரங் கொண்டு
சிந்தை வெகுண்டு முந்தி தளுண்டு

அப்பப்பா அம்மம்மா அய்யய்யா அக்கக்கா
மெய்ப்புடனே முத்து வீரேந்திரன்
ரதிமதலீலை செய்தான் – ரதியறிந்து
ரதிமதலீலை செய்தான்

பாடல்

35. ஆரால்சொல்ல வசங்கான் வெகுமதிகள்
ஆரால் சொல்ல வசங்கான்

மின்னினுட சோதியும் விண்வில்லுட சோதியும்
சன்னையில் மகமேரு தங்கச் சோதியும்
வன்னியுட சோதியும் மார்த்தண்டன் சோதியும்
துன்னிடிச் சோதியும் தோற்கு ரெற்றின்
இந்திர லோகமும் இந்நாக லோகமும்
விந்தைபிதிர் லோகமும் வீரலோகமும்
கெந்தர்வ லோகமும் கெச லோகமும்
பிந்தாமண் லோகமும் பெறுங்கெண்டைச் சேலையும்
அண்டத்துக் கப்பால் அட்டசைக்கு மப்பால்
மண்டலத்துக் கப்பால் மணக்குஞ் சவ்வாது
சண்டன் முத்து வீரசாமி மகிழ்மோகினி
கொண்டாடு நிதிபெற்றுக் குறுத்தியுஞ் சென்றாள்

ஆரால்சொல்ல வசங்காண் வெகுமதிகள்
ஆரால்சொல்ல வசங்காண்

## விருத்தம்

36. கிடையின்மேல் பற்பலர் கிட்டிடுமினாள் பார்பார் சென்று
இடையில் அந்தலாகு கொண்டெடுழுத்து வான்முகிலை
தொட்டு
விடுகொளுச் சேருமுத்து வீரப்பூச் சேந்திர நாட்டில்
துடைதட்டிக் கொண்டு நல்லதுரைச் சிங்கன்
தோன்றினானே!

## பாடல்

37. சிங்கன் வந்தானே துரைக்குறச்
சிங்கன் வந்தானே
சிங்காசனத்தினன் சிங்கக்கொடியினன்
சிங்கப் பெரியின் சிங்க ராசியினன்
சிங்காடி யம்பினன் சிங்கமுகன்
பின்ன சிங்கன் முத்துவீரச் சிங்காரன் நாட்டினில்
சிங்கன் வந்தானே – துரைக்குறச்
சிங்கன் வந்தானே.

38. சிங்களமும் ராச்சிரங் கையுங்கொள் வளனாடுஞ்
சிங்கம் புணரியும் சிங்கம்புலிவாடி கோட்டையும்
எண்டிசையும் மகிழ் சண்டபிர சண்டன்
அண்டலாதனை வென்ற கண்டற் கோடாலி
சொண்டுசொல் வீரர்மிண்டன் கொண்ட
பேரண்ட வுத்தண்டன் முத்துவீர
மண்டலிகர் நாட்டில் கொண்டையும் பெட்டையும்
கண்டற் கோட்டையும் தொண்டை நாடும் ஆனானே

39.மாரியர் பாகன் நாரியர் மோகன்
கூரிய வோகன் சீரிய போகன்
ஆரிய தேகன் வீரிய பேகன் சூரியன்
முத்து வீரய்ய நாட்டினில்
வாரிகளெல்லாம் ஏரிகளெல்லாம் வரப்புகளெல்லாம்
விரைப்புகளெல்லாம் சேருகளெல்லாம்
போருகளெல்லாம் தினம்கன்னி குத்தும் சிங்கன் நானே
கன்னாப் பின்னாக்கச் சாப்பி சாக்காரு மீரு
மின்னாப் பில்லாக் கவிஞர்க்கு மெரையன்
முத்து வீரய்ய நாட்டி னில்
வன்னிகளெல்லாம் பன்னிகளெல்லாம்
மாவுகளெல்லாம் காவுகளெல்லாம்
தினமொட்டு வயக்குஞ் சிங்கனும் நானே!

40.சங்கன் வந்தானே – துரைகுறச்
சிங்கன் வந்தானே
மெய்யின்னு மய்யே – பறவைகள்
மெய்யின்னு மய்யே
முத்து வீரப் பூச்செயன் நாடான
மேனாடெல்லாம் புகழ் கோனாட்டுப் பண்ணையில்
துய்யக் கருனாரை வெண்நாரை
சுத்த சம்பானாரை நத்தைகொத்தி நாரை
துய்யமல்லிச் சேர்த்துக் காற்றி பூற்ற
நெற்றிச் சாற்றுக் கெற்ற பொற்று
பாற்று பாற்று மெய்யின்னு மய்யே

வருகுதய்யே முத்துவீரப் பூச்செயன்
வண்டரை வெல்லும் வளனாட்டுப் பண்ணையில்
கருமுகிலுடன் கானாங்கோழியும் காட்டுக் குருவியும்
கூட்டமாய் கூடியே வருகுதய்யே!

41. வருகுதய்யே பறவைகள் வருகுதய்யே
சேருதய்யே பறவைகள் சேருதய்யே
சேருதய்தே முத்துவீரப் பூச்செயன்
செல்வ மருங்கை கெளிக்கின்ற பண்ணையில்
தாராவும் ஆராவும் சாராவும் நாராவும்
பானுங்கம் புளுங்கும் புகும்பாய் வந்து
சாரும் பச்சைக்கிளி சச்சுங்கிச்சு கிச்சு
மேருமிச்சு நொச்சு மொச்சு சென்றேச்சு
சாருங்காடை பேடை யோடுஞ் சோடுகூடி
ஓடிஓடியாதி ஓடையூடு நாடி வருகுதய்யே!

42. நாரை சூரையோர் மூஞ்சாதை சோரகிரி
போர்சொயார வார் மோரு மாரி
சேருதய்யே பறவைகள் சேருதய்யே
வந்துடய்யே பறவைகள் வந்து தடய்யே
வந்துடய்யே முத்துவீரப் பூச்செயன்
வானா டொக்கும் தளக்கானாட்டுப் பண்ணையில்
முந்த நாரையானும் உள்ளாவு மன்றிலும்
மூ்ளிக்குருவியும் கூளைக் கிடாவும்
முந்த மரங்கொத்தி மெத்த மெத்தமொத்தி
தித்திக்கித்தி யிரைகத்தி புத்தைச்சுத்தி வருகுதய்யே!

43. பூந்தலாந்தி லுந்திப்பூந்தி சீந்திமோந்து மோந்த
ஆந்தை சேர்ந்து பாந்திபாந்தி பாந்தி
முந்தும் ஒருபக்குமறு மொக்கு வலுமொக்குக்
கனலொக்கும் வளரிக்கும் எறிகைக்குமது தொக்கு
வந்துதடய்யே பறவைகள் வந்துடய்யே
சிக்கிச்சடய்யே பறவைகள் சிக்கிச்சடய்யே
சிக்கிச்சடய்யே முத்துவீரப் பூச்செயன்
செஞ்சிபுகழ் பளியஞ்சி வயலுள்ள நாட்டில்
தகக்கண முன்னூறு சகட கட்டஞ்சுநூறு
தாரார்க்குஞ் செண்ணூர் வயலில் சிக்கிச்சடய்யே

44. தக்கக் கண்ணிக்குள்ளும் சுடும் குறட்டுக்குள்ளம்
தக்கஞ் சுண்டலுக்குந் தாளிச்ச பொரியலுக்கும்
சண்ணும் புளிக்கறிக்குஞ் தாங்காமிளகு நீர்க்கும்
சிக்கிச்சடய்யே பறவைகள் சிக்கிச் சடய்யே.

## சிங்கியைத் தேடல்

45. சிங்கியைத் காணேன் என்வங்கணச்
சிங்கியைக் காணேன்
சிங்கியைத் தான் எங்கும் காணேன்
பொங்கின்ன மானே இங்கினை நானே
அன்ன நடையாள் சின்ன இடையாள்
வன்னத் துடையாள் பொன்னி னுடையாள்
இச்சைச் சிலையாள் அச்சுக் குலையாள்
வெச்சுப் பூலியாள் எச்சுச் சாலியாள்
கஞ்சி யருள்வாள் கொஞ்சி யிரைவாள்

மொஞ்சி தருவாள் நெஞ்சு கரைவாள்
நித்திய கலியாணன் சத்துரு சங்காரன்
முத்து வீரேந்திரன் வெற்றி நன்னாட்டினில்
சிங்கியைக் காணேன் – என்வங்கனச்
சிங்கியைக் காணேன்.

46. வந்தாயோ சிங்கிவளா வளா
வந்தாயோ சிங்கி
வந்தாயோ சென்றலைந் தாயோ
உடல் நொந்தாயோ உயிர் தந்தாயோ
அம்மாடி எங்கணு மோடி
கொங்கையு மூடி என்னையு நாடி
அச்சுக்காட்டிக் கெண்டை சாச்சுக்காட்டி என்னை
எச்சுக் கூட்டி மெள்ள ஈச்சுக் கொட்டிக்கு
சோர் போசன முல்லைத்தார் வாசன்
முத்து வீரேசன் நஞ்செரு நன்னாட்டில்
வந்தாயோ சிங்கிவளா வளா
வந்தாயோ சிங்கி

47. காக்கை எனைத்தானே தீர்க்கமா யுருட்டி
மூக்கிலோட வைத்த மாற்கமென சிங்கியது
தாக்கன்முத்து வீரவாக்கன் மகிழ் மோகினி
எற்கையாகத் தந்த மூக்குத்தி சிங்கா
வட்ட முலைதனில் மின்னட்டாந் துணிபோட்டு
கட்டி வைத்ததென்ன சட்டமாய் சிங்கிஅது
கூடன்முத்து வீரன்சிட்டன் மகிழ் மோகினி
பட்டுரவிக்கை தந்தார் தொட்டண்டா சிங்கா.

48. வந்தாயோ சிங்கிவளா வளா
வந்தாயோ சிங்கி
சொர்ண மான்கிளி வர்ண வண்ணமாக
மின்னின கூடையேது பன்னடி சிங்கி
தனமன் முத்துவீர மன்னன்மகிழ் மோகினி
என்னை மகிழ்ந்தருள பொன்கூடை சிங்கா
சங்கங் கனியப்பொத்து தொங்கத் தொங்க
கொங்கை தன்னிற்போட்ட சங்கையேன் சிங்கா
தங்கன்முத்து வீரதுங்கன் மகிழ் மோகினி
மங்கை முத்தாரம் போட்டது சிங்கா.

49. ஆசி நெற்றியி லுள்ளாசமாய் கணிய
பூசி வைத்ததென்ன யோசனை சிங்கியது
நேசன் முத்துவீர ராசன் மகிழ்மோகினி
வாசமாய் சவ்வாது பூசினான் சிங்கா
கோரமாகவே லுய்யாரக் கொண்டைக் குள்ளே
சேர்த்து திணிச்சதென்ன யோசனை சிங்கியது
வாரன் முத்துவீர சூரன்மகிழ் மோகினி
சாரமாய் தருவெட்டி வோடா சிங்கா!

50. ஒப்பாயமினு மினென மெய்ப்பாங்கா தினிற்சில்லை
இப்ப போட்டதென்ன தப்பறைச் சிங்கியது
அப்பன் முத்துவீர செப்பன் மகிழ்மோகினி
நடப்பாய் தருசல்லடக் கொப்படா சிங்கா
ஆடுமிடையிக் குள்ளே ஓடிஓடி நல்ல
காட னிறகைசேர்த்த மோடியேன் சிங்கி
சேடன் முத்துவீரன் மகிழ் மோகினி
நாடித்தந்த பச்சை ஆடைகாண் சிங்கா

51. ஆரு மகிழ்ந்திடவே மோருஞ் சோறுமுண்டு
நேரையா யிருவருஞ் சேருவோம் சிங்கி
சோரர்தனை வெல்ல முத்துவீரதுரை நன்னாட்டில்
சீராய்ச் சேர்ந்துகளி கூறுவோம் சிங்கா
அதிகமதி வதனனுக்கும் துதிசொல்
நிதியனுக்குஞ் முதிருந்திய தன்னுக்கும்
இதுவுமதி வதனனுக்கு சோபனம்
தருவோத் தருள் தருணனுக்கும்
அரிஅயன் அருணனுக்கும்
மக்கிரிகை கிரிகிரணனுக்குஞ் சோபனம்.
வெண்புகழ் செகமுகிற்கு குணஞ்சேர்
வெண்கரிக்குப் பெண்களைச்
சேரான் புலிக்கு நுண்புகழ் பரியனுக்கு சோபனம்
முத்தணியுஞ் சாந்தனுக்கு முத்துரதி காந்தனுக்கு
முத்தமிழ்சேர் வேந்தனுக்கும்
முத்துவீரேந் திரனுக்கும் சோபனம்.

மங்களம்

52. ஒன்றான வங்கிஷனுக்கு ரெண்டான தேகனுக்கு
மூன்றாந் தியனுக்கு நாலாண்டா லனுக்கு
அஞ்சான நாடனுக்கு ஆறா விருதனுக்கும்
எங்கள் முத்துவீரப் பூச்சேந்திரனுக்கு மங்களம்.

முற்றும்

குருவே துணை

பிற்குறிப்பு

முத்துவீரப் பூச்செய நாயக்கர்கள் பேரில் குறவஞ்சி எழுதி முடிந்தது. சிற்றம்பலத்தின் குறவஞ்சி எடுத்துவன் கொடுக்கவும் கொடா போனால் சுண்ணியைச் சுட்டு கையில் எடுப்பான். ஆகையாலே, அதுவறிந்து பயபக்தியாய் கொடுத்து விடவும், கொடாதே போனால் பாஷாம்பத்தின் பீரங்கி வாயிலே வைச்சு சுட்டுப் பிடுவான்.

**முருகன் துணை**

**தேவி சகாயம் இது செய்யும்.**

# பின்னிணைப்பு – 1

## செய்யுள் முதற்குறிப்பு அகராதி

## (எண்–பாடல்எண்)


| செய்யுள் தொடக்கம் | எண் |
|---|---|
| அஞ்சுகமாம் | 12 |
| அஞ்செழுத்தை | 24 |
| அணுகலார் தலையெலாம் | 19 |
| அய்யய்யோ ஆயே | 33 |
| அரும் பொன்நதி | 28 |
| அனுமன் வால | 13 |
| ஆசி நெற்றி | 49 |
| ஆரால் சொல்ல | 35 |
| ஆருமகிழ்ந்திடவே | 51 |
| இந்திர செயித்து | 17 |
| உக்கிர மார்த்தாண்ட | 18 |
| உரத்தன் முத்து | 11 |
| எங்கள் வேள்கிரியின் | 26 |
| ஒப்பாய மினுமென | 50 |
| ஒன்றான வங்கிஷனுக்கு | 52 |
| ஒடிச்சிலாகிச்சு | 16 |
| கடக்காதன் மேல் | 32 |
| காக்கை எனைத்தானே | 47 |
| காந்தியுடன் காந்தியாய் | 9 |
| கார்வண்ணனுந்தியும் | 14 |
| கிடையின்மேல் | 36 |
| குறவஞ்சி வந்தாளய்யா | 23 |
| கொண்டையில் | 7 |

| | |
|---|---|
| சரிகரி சரிசகாரி | 29 |
| சிங்கியைக் காணேன் | 45 |
| சிங்களமும் | 38 |
| சிங்கன் வந்தானே | 37,40 |
| சுத்தியத்தெரி | 6 |
| சூரஞ்சேரு | 10 |
| செகசெகசெகு செகு | 25 |
| தங்கக | |
| தங்கக் கண்ணிக்குள்ளும் | 44 |
| தகுடதிமித்திமி | 1 |
| தனத்தன | 5 |
| தத்தெய்யதமிதகிட | 21 |
| தாந்திரி திரிதில்லா | 31 |
| நகநக நக்கென்ன | 3 |
| நாரை சூரை | 42 |
| நூவில்லி பாரே | 27 |
| பிராணசகி | 4 |
| பூந்தலாதி | 43 |
| மக்கனித்தேச | 20 |
| மாரியர் பாகன் | 39 |
| ரதிதமயந்தி | 8 |
| ரதி மதலீலை | 34 |
| ராமுகோ ராமுகோ | 30 |
| வஞ்சிவந்தாள் | 22 |
| வழியெல்லாம் | 15 |
| வந்தாயோ | 46 |
| வந்தாயோ சிங்கி | 48 |
| வருகுதய்யே | 41 |
| வீராதி வீரனுக்கு | 2 |

## சொல்லடைவு


| | | | |
|---|---|---|---|
| அகடம் | 1 | அரி | 50 |
| அகத்தியன் | 13 | அருணன் | 50 |
| அங்கம் | 25 | அருவி | 25 |
| அச்சு | 44 | அர்ச்சுனன் | 3 |
| அஞ்சனம் | 22 | அல்குல் | 11 |
| அஞ்சு | 42, 51 | அற்புதம் | 16 |
| அஞ்சுகம் | 12 | அனுமன் | 13 |
| அஞ்செழுத்து | 24 | அன்பர் | 9 |
| அட்சய பாத்திரம் | 13 | அன்பு | 33 |
| அட்சரம் | 24 | அன்மை | 44 |
| அட்டகெசங்கள் | 25 | ஆகாசம் | 9, 20 |
| அண்டம் | 20, 34 | ஆசி | 48 |
| அதிசயம் | 31 | ஆசை | 8 |
| அந்தரங்கம் | 25 | ஆடை | 49 |
| அப்பன் | 49 | ஆட்சி | 19 |
| அமிர்தநதி | 27 | ஆந்தை | 42 |
| அம்பரம் | 12 | ஆயுதம் | 16 |
| அம்பாதம் | 9 | ஆரியர் | 38 |
| அம்பு | 36 | ஆழி | 14 |
| அம்புலி | 9 | ஆறு | 51 |
| அயன் | 50 | இசை | 12 |
| அயனார் | 14 | இச்சை | 44 |
| அரசர் | 19, 22 | இடை | 44 |
| அரம்பையர் | 15 | இந்திரன் | 25, 17 |

| | |
|---|---|
| இந்திராணி | 8 |
| இந்திரலோகம் | 34 |
| இந்துஸ்தானம் | 29 |
| இரண்டு | 51 |
| இரும்புநதி | 27 |
| இலங்கை | 25 |
| உச்சி | 16 |
| உடல் | 45 |
| உயிர் | 45 |
| உரத்தன் | 11 |
| எண்திசை | 37 |
| எலி | 11 |
| ஏரி | 38 |
| ஒட்டியானம் | 29 |
| ஒன்று | 51 |
| ஒன்னார் | 16 |
| ஓந்தி | 42 |
| கஞ்சி | 44 |
| கடல் | 16 |
| கண் | 31 |
| கண்டன் | 13, 18 |
| கண்ணன் | 31 |
| கண்ணி | 43 |
| கதிர் | 14 |
| கமலவாசன் | 14 |
| கமுகம் பிள்ளை | 14 |
| கரு | 31 |
| கருனாரை | 39 |
| கருமுகில் | 39 |
| கனா | 31 |
| கர்த்தனுக்கு | 2 |
| கலிங்கம் | 29 |
| கலியாணன் | 44 |
| கல்லுநதி | 27 |
| கவிஞர் | 38, 17 |
| கறப்புள் | 31 |
| கன்னாடர் | 18 |
| கன்னி | 38 |
| காக்கை | 46 |
| காக்கையன் | 31 |
| காடை | 40 |
| காட்டுக்குருவி | 39 |
| காந்தன் | 2 |
| காந்தி | 9 |
| கார்வண்ணன் | 14 |
| காவு | 38 |
| காற்றுநதி | 27 |
| கானாங்கோழி | 39 |
| கிடாய் | 31 |
| கிரி | 25 |

| | | | |
|---|---|---|---|
| கிரீடம் | 16 | கொண்டை | 7, 48, 37 |
| கிரீடன் | 2 | கொம்பு | 31 |
| கிளி | 47 | கோடாலி | 37 |
| கினை | 11 | கோடு | 16 |
| கின்னரம் | 21 | கோட்டை | 37 |
| குச்சி | 21 | கோனாடன் | 14 |
| குஞ்சரம் | 16 | கோனாடு | 39 |
| குடகர் | 1 | சகி | 3, 12 |
| குடை | 19 | சகடம் | 42 |
| குட்டை | 10 | சக்கரம் | 24 |
| குயில் | | சங்கத்தமிழ் | 17 |
| குலம் | 31 | சங்கம் | 47 |
| குலை | 44 | சங்கரன் | 44 |
| குழல் | 11, 22 | சங்கு | 47 |
| குறத்தி | 26 | சஞ்சீவி | 22 |
| குறவஞ்சி | 21, 22 | சட்டன் | 10 |
| கூடை | 47 | சண்டன் | 34 |
| கூளைக்கிடா | 41 | சதகுணம் | 21 |
| கெசலோகம் | 34 | சத்தியம் | 2 |
| கெண்டை | 34, 7, 45 | சத்துரு | 22, 44 |
| கெந்தர்வலோகம் | 34 | சந்திரமதி | 8 |
| கெம்பீரம் | 4, 5 | சமேதன் | 7 |
| கேடு | 16 | சம்பாநாரை | 39 |
| கொங்கை | 47, 45 | சவ்வாது | 34, 48 |
| கொடூரன் | 21 | சாடிக்காரர் | 18 |

சாணன் 11
சாதி 25
சாந்தன் 50
சாலி 44
சிங்கக்கொடி 36
சிங்கக் கொடியான் 17
சிங்கமுகன் 36
சிங்கம் 37
சிங்கராசி 36
சிங்களம் 20
சிங்கன் 36
சிங்காசனம் 36
சிங்கி 47, 44
சிட்டபரிபாலகன் 10
சித்திரமால் 15
சித்திராங்கி 8
சித்து 24
சிந்தை 17, 33
சிமையதார் 19
சிலை 44
சின்னய்யன் 19
சீதை 8
சீவன் 12
சுகம் 12
சுண்டல் 43
சுபையதார் 19
சுமத்திரை 8
சூரன் 2, 48
சூரியன் 38
சூரை 41
செகபதி 1
செங்கோல் 8
செஞ்சி 42, 22
சென்னூர் 42
செயம் 30
சென்னல் 14
சேடன் 49
சேலை 13
சேல 34
சேலையினான் 16
சைகை 32
சொர்க்கம் 25
சொர்ணம் 47
சோதா 6
சோதி 20
சோபனம் 50
சோரகிரி 41
சோரர் 50
சோறு 50
தங்கம் 32, 25

| | | | |
|---|---|---|---|
| தங்கை | 25 | துணி | 46 |
| தஞ்சம் | 21 | துணை | 1 |
| தஞ்சை | 22 | துணைவன் | 19 |
| தடமுலை | 14 | துதி | 50 |
| தடம் | 1 | துப்பாக்கி | 6 |
| தண்ணிநதி | 27 | துரைச்சிங்கன் | 35 |
| தந்திரம் | 12, 33 | துரோபதை | 13 |
| தமையந்தி | 8 | துலுக்கானம் | 29 |
| தரு | 48 | துளுவம் | 29 |
| தலை | 19 | துறை | 22 |
| தழல்நதி | 27 | தெட்சனம் | 14 |
| தனபதி | 1 | தெம்பு | 33 |
| தாக்கன்முத்து | 46 | தெய்வம் | 15 |
| தார் | 45 | தென்றல் | 11 |
| தாளம் | 25 | தேகம் | 13 |
| திக்கரசர் | 16 | தேகன் | 38, 51 |
| திக்கு | 17 | தேசம் | 24 |
| திங்கள் | 18 | தேன் | 25 |
| திரிசூலம் | 17 | தொண்டு | 23 |
| திருமால | 9 | தொண்டைநாடு | 37 |
| திரோபதை | 8 | தோரணம் | 19 |
| திறை | 19 | நகர் | 14 |
| தீ | 9 | நக்காலன் | 31 |
| தீரன் | 2 | நடம் | 16 |
| துடை | 44, 35 | நட்சத்திரம் | 25 |

| | |
|---|---|
| நதி | 26 |
| நத்தைகொத்திநாரை | 39 |
| நரி | 11, 31 |
| நரேந்திரன் | 18 |
| நரை | 14 |
| நவகண்டம் | 14 |
| நன்னாடு | 45, 44 |
| நன்னாடன் | 14 |
| நாகப்பாசம் | 17 |
| நாகலோகம் | 34 |
| நாடு | 37, 3, 7 |
| நாதன் | 18 |
| நாரியர் | 38 |
| நாரை | 41 |
| நாலு | 17, 51 |
| நாவு | 18 |
| நான்முகன் | 14 |
| நிதி | 34 |
| நிதியன் | 50 |
| நிறம் | 23 |
| நீ | 9 |
| நீலநதி | 27 |
| நீர் | 43 |
| நூறு | 42 |
| நெல் | 14 |
| நெஞ்சு | 33, 44 |
| நெற்றி | 48, 15, 3 |
| நேசன் | 48 |
| பசுங்கிள்ளை | 14 |
| பச்சை | 49 |
| பச்சைக்கிளி | 40 |
| பச்சைநதி | 27 |
| பஞ்சவர்ணம் | 18 |
| பஞ்சபாணன் | 10, 10 |
| பட்சி | 31, 21 |
| பட்டு | 46 |
| பண்ணை | 46, 39, 40 |
| பண்பு | 33 |
| பதினெட்டு | 16 |
| பத்தாறு | 19 |
| பத்தியம் | 13 |
| பரி | 31, 1 |
| பரியன் | 50, 1 |
| பரியான் | 16 |
| பரிபாலன் | 2 |
| பவளநதி | 27 |
| பறவைகள் | 39, 40, 41 |
| பாகன் | 38 |
| பாங்கர் | 25 |
| பாதம் | 1, 7 |

| | | | |
|---|---|---|---|
| பாதாளம் | 14 | பூச்சேந்திரன் | 2 |
| பாம்பு | 11 | பூதங்கள் | 24 |
| பாரினம் | 14 | பூமி | 14 |
| பார்வதி | 14 | பூலோகம் | 29 |
| பாலகன் | 10 | பூவை | 14 |
| பாலநதி | 27 | பெட்டை | 37 |
| பாவாடையான் | 18 | பெண்கள் | 50 |
| பானு | 20 | பேகன் | 38 |
| பிச்சி | 21 | பேடை | 40 |
| பிஞ்சு | 14 | பொடிகள் | 16 |
| பிரபந்தம் | 22 | பொருள் | 16 |
| பிரமன் | 23 | பொன்கூடை | 47 |
| பிரமணன் | 12 | பொன்நதி | 27 |
| பிராணசகி | 5, 4 | பொன்னி | 44 |
| பிறப்பு | 14 | போகன் | 38 |
| பிறை | 16 | போசனம் | 45 |
| பீலி | 21 | மகபதிகள் | 1 |
| புகழ் | 39, 42 | மங்களம் | 2 |
| புத்தி | 24 | மங்கை | 47 |
| புராணம் | 14 | மங்கையர் | 25 |
| புலி | 50, 37 | மச்சகெந்தி | 8 |
| புலிக்கொடி | 17 | மஞ்சள் | 22 |
| புவி | 17, 14 | மடபதிகள் | 1 |
| புஷ்பம் | 25 | மடு | 15 |
| பூச்செயன் | 1 | மடை | 15 |

| | |
|---|---|
| மலைநதி | 27 |
| மண்டலம் | 17, 20 |
| மண்டலீகர் | 23, 37 |
| மணி | 31 |
| மண்ணுநதி | 27 |
| மண்போதரி | 8 |
| மதவேள் | 12 |
| மதனன | 7 |
| மதனாகரன் | 9 |
| மதி | 17 |
| மதிவனன் | 50 |
| மது | 50, 7 |
| மத்தாப்புகள் | 20 |
| மந்திரம் | 24 |
| மந்திரவாதி | 24 |
| மரங்கொத்தி | 41 |
| மராட்டியம் | 29 |
| மரை | 15 |
| மலரம்பன் | 29 |
| மலர் | 15, 7 |
| மலை | 14 |
| மலையான் | 14 |
| மனுபதிகள் | 1 |
| மன்னன் | 47 |
| மாமலை | 25 |
| மாரி | 41 |
| மாரியர் | 38 |
| மார்த்தண்டன் | 18 |
| மாலை | 9, 15 |
| மாலையினான் | 15, 18 |
| மாவு | 38 |
| மாளவம் | 29 |
| மான் | 44, 47 |
| மிளகு | 43 |
| முகில் | 35 |
| முக்கண் | 31 |
| முசுபுதார் | 19 |
| முடக்காலன | 31 |
| முடி | 1 |
| முத்தமிழ் | 50, 7 |
| முத்தம் | 12, 14 |
| முத்தாரம் | 47 |
| முத்து | 10, 10, 15 |
| முத்துநதி | 27 |
| முத்துப்பந்தர் | 25 |
| முத்து ரதிகாந்தன் | 50 |
| முத்துவீரேந்திரன் | 9,10,8,12,7 |
| முத்துவீரதுரந்தரிகன் | 10 |
| முத்துவீரத்துறை | 10, 1 |
| முத்துவீரப் பூச்சேந்திரன் | 13,5,3 |

| | | | |
|---|---|---|---|
| முத்துவீரன் | 11, 2 | ரம்பை | 12 |
| முலை | 46, 7 | ரவி | 10, 17, 9 |
| முல்லை | 45, 15 | ரவிக்கை | 46 |
| முள்ளன் | 31 | ராசர் | 19 |
| முனிவர் | 21 | ராசன் | 48 |
| முன்னூறு | 42 | ராசாளி | 11 |
| மூக்கு | 46, 31 | ராசேந்திரன் | 18 |
| மூக்குத்தி | 46 | ராச்சியம் | 19, 27 |
| மூஞ்சாதை | 41 | ராதை | 8 |
| மூளிக்குருவி | 41 | ராவணன் | 11 |
| மூன்று | 51 | ரூபலா | 23 |
| மெய் | 33 | ரெண்டு | 7, 6 |
| மேடை | 25 | லத்தி | 6 |
| மேரு | 25 | லீலை | 33 |
| மேளம் | 25 | லோகம் | 14, 22 |
| மோகமோகினி | 8 | வங்காளர் | 18 |
| மோக்னாங்கி | 8 | வச்சிரம் | 25 |
| மோகினி | 46,48,34 | வஞ்சகம் | 12 |
| மோடி | 49 | வஞ்சி | 22, 17 |
| மோர் | 50 | வடகர் | 1 |
| யானையினான் | 16 | வட்டம் | 46 |
| யோசனை | 48 | வண்டுகள் | 7 |
| ரஞ்சிதம் | 12 | வண்ணம் | 47 |
| ரதி | 17, 21, 33, 8 | வயல் | 42, 15 |
| ரதிகாந்தன் | 9 | வயிரவன் | 17 |

வரப்பு 38
வரிசை 28
வழி 15
வர்ணம் 47
வளநாடன் 14
வளநாடு 37
வளை 11
வள்ளல் 14
வனம் 14
வன்னி 38
வாகை 15
வாசல் 25, 19
வாசன் 45
வாடை 22
வாணர் 32
வாயு 20
வாய்மை 2
வாரி 38
வால் 13
வான் 35, 14
விகடம் 35, 14
விண் 14, 16
வித்துவம் 2
விந்தைகள் 33
விரகசம் 21
விருத்தம் 22
விருத்திரம் 1
வில் 10
விழி 7
வீதி 31
வீரசாமி 34
வீரதுங்கன் 47
வீரவாக்கம் 46
வீரன் 2
வீரலோகம் 34
வெகுமதிகள் 34
வெண்கரி 50
வெண்ணிலா 20, 9
வெண்ணிலாப்பிள்ளை 14
வெண்நாரை 39
வெண்புகழ் 50
வெள்ளம் 14
வெள்ளாறு 14
வெள்ளி நதி 27
வெற்றி 44
வேந்தன் 50
வேந்தர் 30
வேலாயுதம் 1
வேள்கிரி 25
வேள்பாலன் 19

# துணைநூற் பட்டியல்

1. ஆசிரியர் குழு : சுவடிப் பதிப்புத் திறன் (தொகுதி – 1)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி
சென்னை – 600 113

2. தமிழ்ச் சுவடி : சென்னைப் பல்கலைக்கழகம்
அரசியனார் கீழ்த்திசை சுவடியியல் நூலகம்
சென்னை – 600 005.

3. தமிழிலக்கிய வரலாறு : மது.ச. விமலானந்தம்